

## ஊரகத் தொழில்முனைவுகளுக்குப்

# புதிய பாதை...



**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்
கோவையில் 05.03.2023 அன்று நடைபெற்ற சாரஸ் விழாவில் சுய உதவிக் குழுவினரின்
உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டு மகிழ்ந்த நிகழ்வு

# வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்


## TNRTP ஓர் அறிமுகம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது (TNRTP) வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP), என்ற அடையாளப் பெயரில் செயல் படுகிறது. இது வறுமை ஒழிப்பையும் தாண்டி, ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்களை ஊக்குவித்தல், திறன் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல், அதற்கான நிதியுதவி ஏற்படுத்திக் கொடுத்தல், ஆகியவற்றிற்கு வழிவகை செய்கிறது. உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு 70:30 என்ற நிதிப் பங்களிப்புடன், **ரூ. 910.37 கோடி (123.74 மில்லியன் டாலர்)** மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## திட்டப் பயனாளிகள்

- மகளிர்
- இளைஞர்கள்
- சுய உதவிக் குழு (SHG) உறுப்பினர்கள் மற்றும் SHG குடும்பத்தினர்
- நலிவுற்ற பிரிவினர் (SC, ST, மற்றும் மாற்றுத் திறனாளிகள்)
- ஆர்வமுள்ள தொழிற்குழுவினர்

## திட்டச் செயலாக்கப் பகுதிகள்




**இத்திட்டமானது,**

- **31** மாவட்டங்கள்
- **120** வட்டாரங்கள்
- **3,994** ஊராட்சிகள்
- **4,83,682** இலக்குப் பயனாளிகளுக்கு சேவையை வழங்கி வருகிறது.


PROJECT
சமுதாயத் திறன்
COMMUNITY SKILL

# திட்டத்தின் கூறுகள்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பின்வரும் கூறுகள் வழியாக ஊரக சமுதாயங்கள் புத்தாக்கம் பெறுகின்றன.

## ஊரக நிறுவன சூழல் அமைப்பின் மேம்பாடு

வணிக மேம்பாட்டு ஆதரவு சேவைகளை வழங்குவதற்கான நிறுவனங்கள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குவதன் வாயிலாக ஊரக தொழில் நிறுவனங்களை மேம்படுத்தி அவை தொழில்நுட்பம், நிதி மற்றும் சந்தை இணைப்புகளைப் பெற வழிவகுக்கிறது.

## நிறுவன தொழில் திட்ட நிதியுதவி

தனிநபர் / குழு தொழில் நிறுவனங்களுக்கு தேவையான நிதியுதவியை இணை மானிய நிதித் திட்டத்தின் வாயிலாக, முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலம் எளிதாகப் பெற வழிவகை செய்கிறது. திட்டச் செயலாக்கப் பகுதிகளில் புதுமைத் தொழில் நிறுவனங்கள் உருவாக அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறது.

## திறன் மற்றும் வேலை வாய்ப்புகள்

வேளாண், வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத துறைகளில் சமுதாய அடிப்படையிலான திறன் பயிற்சி மூலம் கிராமப்புறங்களில் சாத்தியமுள்ள நிலையான ஊதியம் மற்றும் சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், மேலும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழில்முனைவோர்களுக்கு பயிற்சி அளித்தல்.

# “சிறந்த எதிர்காலத்தை நோக்கி தங்கள் வாழ்க்கையை வடிவமைக்கின்றனர்”



சமுதாயத் திறன் பயிற்சியானது, டெரக்கோட்டா கைவினைப்பொருட்களைப் பற்றிய வலுவான புரிதலைப் பெறுவதற்கு முக்கியப் பங்காற்றியது. இப்பயிற்சி சிறந்த கலையை கற்றுக்கொள்வதற்கு உதவியது மட்டுமல்லாமல், திறமையான சந்தைப்படுத்தல் நுட்பங்களுடன் மாதம் ரூ.1 லட்சம் வருமானம் ஈட்ட வழிவகை செய்கிறது.

சமுதாயத் திறன் பள்ளி
உதவித்தொகை–20 பயிற்சியாளர்களுக்கு ரூ.1,00,000/– வழங்கப்பட்டது

தென்னமாதேவி தொழிற்குழு,
கோலியனூர் வட்டாரம்,
விழுப்புரம்.

## சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)




பாரம்பரிய மற்றும் அதிக ஊதியம் பெறக்கூடிய தொழில்களில் உள்ள திறன் இடைவெளியைக் கண்டறிந்து, இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு நிலையான வருமானம் ஈட்டக்கூடிய வகையில் திறன் பயிற்சி அளிக்க, சமுதாயத் திறன் பள்ளிகள் நிறுவப்படுகின்றன.

## சமுதாயத் திறன் பள்ளிகளின் (CSS) தேவை

- ஊரக இளைஞர்கள் எளிதாக கிராமத்திலேயே பயிற்சியைப் பெற வசதி.
- பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்கள், குறைந்த அளவிலான திறனுடையவர்கள் மற்றும் திறனற்றவர்களின் திறனை மேம்படுத்துதல்.
- வகுப்பறை பயிற்சியைப் போல் இல்லாமல், தொழில் மையங்களிலே நேரடி செய்முறைப் பயிற்சி.
- பாரம்பரிய தொழில்களான மண்பாண்டம், நெசவு மற்றும் கைவினைப் பொருள் தயாரித்தல் போன்றவற்றை மீட்டெடுத்தல் மற்றும் ஆதரவளித்தல்.

## சமுதாயத் திறன் பள்ளிகளை அமைக்கும் வழிமுறைகள்



# திட்டம் செயல்படும் பகுதிகளில் அமைக்கப்பட்ட சமுதாயத் திறன் பள்ளிகளின் பட்டியல்

குறி விளக்கம்

- தையல் / ஆரி எம்பிராய்டரி (1-248)
- கொத்து மற்றும் கான்கிரீட் வேலை (1-109)
- காளான் வளர்ப்பு (1-73)
- டூ வீலர் மெக்கானிக் (1-83)
- சணல் பைகள் (1-75)
- கைவினைப் பொருட்கள் (1-148)
- உணவு மதிப்புக் கூட்டல் (1-124)
- மின்சார வேலைகள் (1-114)
- கோட்டா மட்பாண்டங்கள் (1-1)
- தோடா எம்பிராய்டரி (1-3)
- மற்றவை (1-613)




**1591**
சமுதாயத் திறன் பள்ளிகள்

**33,861**
பயிற்சி பெற்ற ஊரக இளைஞர்கள்

**Rs.11.92** கோடி
தொகை மதிப்பீட்டில்

மேலும் தகவல்களுக்கு ஸ்கேன் செய்யவும்.

28, பிப்ரவரி, 2023 நிலவரப்படி,

மூலம்: CSS – Map - https://tngis.tn.gov.in/apps/vaazhndhu-kaattuvom-project/#

# “கழிவிலிருந்து செல்வம் – மலரும் பசுமை வாழ்வாதாரம்”



“வாழை நாரா? பயன்படாத பொருள் என நினைத்தோம். ஆனால், சமுதாயத் திறன் பள்ளியில், பயிற்சி பெற்ற பின்பு, பயனற்றவற்றிலிருந்து சுற்றுச்சூழலுக்கு ஏற்ற முறையில், நிலையான வருமானம் ஈட்டும் பொருட்களாக மாற்றிக் காட்டியுள்ளோம். நார்க் கூடைகள், தொங்கும் கூடைகள் (உறிகள்), வீட்டழகுப் பொருட்கள் – முதலியவற்றைச் செய்து வருமானம் ஈட்டுகிறோம். எங்கள் தொழிற்குழு வெற்றிகரமாக இயங்கிவருவது எங்களுக்கு பெருமையளிப்பதோடு, எங்கள் தொழில்முயற்சி சுற்றுச்சூழலுக்கும் நட்பானதாக உள்ளது.

சமுதாயத் திறன் பள்ளி
உதவித்தொகை–25 பயிற்சியாளர்களுக்கு ரூ.75,000/– வழங்கப்பட்டது

நவினிப்பட்டி வாழைநார் தொழிற்குழு,
நவினிப்பட்டி ஊராட்சி,
மேலூர் வட்டாரம், மதுரை.

# “சமுதாயப் பண்ணைப் பள்ளி மற்றும் நடைமுறைகளின் தொகுப்பு மகத்தான அறுவடைக்கு வழி வகுத்தது”




## மக்காச்சோளம் சாகுபடி

“மக்காச்சோளம் சாகுபடி குறித்த சமுதாயப் பண்ணைப் பள்ளி பயிற்சியின் போது, அதிக மகசூல், குறுகிய கால சாகுபடி, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட CO.H.4 ரகத்தை பயன் படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும், இயற்கை வேளாண் நடைமுறைகளைக் கடைப்பிடித்து, மண்வள ஆய்வு செய்து, சிறந்த மகசூலைப் பெறுகிறோம்.”

சமுதாயப் பண்ணைப் பள்ளி உதவித்தொகை–40 உற்பத்தியாளர்களுக்கு ரூ.64,000/– வழங்கப்பட்டது

பழனி உற்பத்தியாளர் குழு,
மேலக்கோட்டை ஊராட்சி,
பழநி வட்டாரம், திண்டுக்கல்.


# சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)

விவசாயிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்யவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும், நடைமுறைத் தொழில் நுணுக்கங்களைத் தொகுத்து, போதிய விழிப்புணர்வைக் கொடுக்கும் வகையில் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS), அமைக்கப்படுகின்றன.

## சமுதாயப் பண்ணைப் பள்ளிகளின் (CFS) தேவை

- வேளாண் மற்றும் கால்நடை மேலாண்மை நடைமுறைகள் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாமை.
- செயற்கை இடுபொருட்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் மண்வளம் மோசமடைதல்
- இழந்த மண்வளத்தை மீட்டெடுப்பதற்கான தேவை
- சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் இயற்கை விவசாய முறைகளை ஊக்குவித்தல்.
- பெண்மயமான வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளில் அவர்களுக்கு பயிற்சி அளித்து விவசாயத்தில் அதிகாரம் அளித்தல்.

## சமுதாயப் பண்ணைப் பள்ளி அமைப்பதற்கான வழிமுறைகள்



## “சமுதாயப் பண்ணைப் பள்ளி பயிற்சியானது, சிறுதானிய வகைகள் பயிரிட எங்களை உற்சாகப்படுத்தியது”




### கேழ்வரகு பயிரிடுதல்

“கேழ்வரகு சாகுபடியில் நல்ல மகசூல் பெற வேண்டும் என்ற இலக்குடன் நாங்கள் பயிரிட்டோம். பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம் மற்றும் மீன் அமினோ அமிலம் போன்ற இயற்கை இடு பொருட்களைப் பயன்படுத்தி ஒரு ஏக்கருக்கு ரூ.2500/– செலவைக் குறைத்தோம். மேலும் பல்வேறு வண்ணப் ஒட்டுப்பொறிகள், இயற்கைப் பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றி, கலப்பின சிஷீ–13 ரக விதைகள் மூலம் அதிக மகசூல் பெற்றோம்.”

சமுதாயப் பண்ணைப் பள்ளி உதவித்தொகை–30 உற்பத்தியாளர்களுக்கு ரூ.64,000/– வழங்கப்பட்டது

தும்பல்பட்டி உழவர் உற்பத்தியாளர் குழு,
தும்பல்பட்டி ஊராட்சி,
பனைமரத்துப்பட்டி வட்டாரம், சேலம்.

# திட்டம் செயல்படும் பகுதிகளில், சமுதாயப் பண்ணைப் பள்ளிகளின் பட்டியல்.

குறி விளக்கம்

- கால்நடைப் பராமரிப்பு (10-2452)
- நிலக்கடலை (2-916)
- உளுந்து (2-450)
- காய்கறிகள் (1-487)
- வாழை (1-230)
- தேங்காய் (1-134)
- பச்சைப் பயறு (1-93)
- தினை சாகுபடி (1-265)
- மற்றவை (1-365)




**5392**
சமுதாயப் பண்ணைப் பள்ளிகள்

**1,64,128**
உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**Rs.45.72** கோடி
தொகை மதிப்பீட்டில்

மேலும் தகவல்களுக்கு ஸ்கேன் செய்யவும்.

28, பிப்ரவரி, 2023 நிலவரப்படி,

மூலம்: CFS – Map - https://tngis.tn.gov.in/apps/community_farm_school/

# “முன்னேற்றத்தின் நெசவு, தறியின் சக்தி”



## விசைதறித் தொழில்

என்னுடைய விசைத்தறி ஊடோடு பாவை இழைத்து துணியாக நெய்வதைபோல் “இணை மானிய நிதித் திட்டத்தால் நான் அடைந்த பயன்களையும் மகிழ்ச்சியையும் பற்றிய வெற்றிக் கதைகளை என் வாழ்க்கை நெய்து கொண்டிருக்கிறது.


வங்கிக் கடன் தொகை – ரூ.4,50,000/–
இதில், இணை மானிய நிதி – ரூ.1,50,450/–

திருமதி. ராதிகா,
ஏழூர் ஊராட்சி,
புதுச்சத்திரம் வட்டாரம், நாமக்கல்.

# இணை மானிய நிதித் திட்டம் (MGP)

தனி நபர் மற்றும் குழு உறுப்பினர்களால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களுக்கு முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற இணை மானிய நிதித் திட்டம் வழிவகை செய்கிறது. இது கிராமப்புற தொழில் நிறுவனங்களின் கடன் தேவை மற்றும் பெறுவதில் உள்ள இடைவெளியை பூர்த்தி செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வங்கிகளால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மூலதனம் 30:70 என்ற விகிதத்தில் வழங்கப்படும். இதில் 30% இணை மானியமாகவும் 70% ( 60% வங்கிக் கடன் + 10% தொழில் முனைவோர் பங்களிப்புத் தொகை) கடன் / மக்கள் பங்களிப்புத் தொகையாகவும் இருக்கும்.




### இணை மானிய நிதித் திட்டத்தின் நோக்கங்கள்

- தொழில் நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் கடனுதவி வழங்க
- விண்ணப்பங்கள் நிராகரிப்பு, கடன் வழங்க எடுத்துக்கொள்ளப்படும் காலம், கடன் பெறுவதற்கான செலவு ஆகியவற்றை குறைக்க
- கடன் வழங்கல், கடன் திருப்பம், சொத்து உருவாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை உறுதி செய்ய

## இலக்கு தொழில் முனைவோர்

1. மகளிர் தொழில் முனைவோர்
2. மகளிர் குழு உறுப்பினர் குடும்ப உறுப்பினர்கள்
3. மாற்றுத் திறனாளர்கள்
4. முதல் தலைமுறை தொழில் முனைவோர்
5. தொழிற் குழுக்கள்
6. உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்

# “ஒரு ஒளிரும் வெற்றி” – இணை மானிய நிதித் திட்டத்தின் மூலம் எல்.இ.டி விளக்கு தயாரிக்கும் தொழில்



## எல்.இ.டி விளக்கு

என்னுடைய சிறு தொழில் இன்று வெற்றிகரமான, எல்.இ.டி பல்பு தயாரிப்பு நிறுவனமாக உயர்ந்துள்ளது. என்னுடைய வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் பெருக்கியதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கும் அளவிற்கு என்னை உயர்த்தியுள்ளது”.

வங்கிக் கடன் தொகை – ரூ.4,50,000/–
இதில், இணை மானிய நிதி – ரூ.1,50,000/–

திருமதி. பூவிழி,
முத்தரசநல்லூர் கிராமம்,
அந்தநல்லூர் வட்டாரம், திருச்சி.

## அனைத்து மட்டங்களிலும் வழங்கப்படும் தொழில் நுட்ப உதவிகள்

1. கிராம அளவில் விண்ணப்பங்களை திரட்ட சமுதாய தொழில் வல்லுநர்கள்
2. வட்டார அளவில் தொழில் திட்டங்களை தயாரிக்க ஓரிட சேவை மையம்
3. மாவட்ட அளவில் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கடன் பெற்று தர தொழில் நிறுவன நிதி வல்லுநர்கள்
4. விண்ணப்பம் முதல் நிதி விடுவிப்பு, கடன் திருப்பம், ஆகியவற்றை கண்காணித்து வழிநடத்த தனி இணையதள வசதி

## இணை மானிய நிதித் திட்ட பயனாளர்களின் எண்ணிக்கை மற்றும் கடன் விவரம்


**1,317**
பயனாளர்கள்

**44.26** கோடி
கடன் தொகை

**13.29** கோடி
இணை மானியம்

## தொழிற் பிரிவு வாரியாக இணை மானிய நிதி வழங்கப்பட்ட விவரம்

### துறை




28, பிப்ரவரி, 2023 நிலவரப்படி,

# "இயற்கையின் வரம் உங்கள் கைகளில்"




## தேங்காய் சிரட்டை கைவினைத் தொழில்

"நாங்கள் அனைவரும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள், மேலும் ஒரு கண்ணியமான வாழ்வாதாரத்தை எதிர்பார்த்தோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தேங்காய் சிரட்டை கைவினைப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியை தேர்ந்தெடுத்தோம். தேங்காய் சிரட்டையிலிருந்து பல புதுமையான மற்றும் நினைவுப் பொருட்கள் தயாரித்து "சிற்பிகா" என்ற பெயரில் விற்பனை செய்து வருகின்றோம். எங்களின் ஆர்வமும் பழமையான கலைத்திறனும் இத்தொழிலை முன்னெடுத்துச் செல்கிறது.

துவக்க நிதி ரூ.75,000/–


சிற்பிகா தேங்காய் ஓடு தொழிற்குழு
துவரிமான் ஊராட்சி, திருப்பரங்குன்றம் வட்டாரம், மதுரை,

# துவக்க நிதி

புதிய தொழில் செயல்பாடுகளை துவங்குவதற்கும் ஏற்கனவே உள்ள தொழில் நிறுவனங்களின் நடைமுறை செலவுகளை ஈடுசெய்வதற்கும் துவக்க நிதி உதவுகிறது. பெண்கள் தலைமையிலான கீழ்க்காணும் நிறுவனங்களின் செயல்களை ஊக்குவிக்க இந்நிதி வழங்கப்படுகிறது.

1. **தொழிற் குழுக்கள்**
2. **உற்பத்தியாளர் குழுக்கள்**
3. **உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்**

## நிதி வழங்கும் வழிமுறை



**துவக்க நிதி மானிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்**

நிறுவனங்களின் தொழில் திட்டத்தைத் தயாரிப்பதில் மாவட்ட திட்ட மேலாண்மை அலகு மற்றும் தொழில் நுட்ப ஆதரவு முகமை உதவுகிறது

**மாவட்ட அளவிலான குழுவின் மதிப்பீடு**

தொழில் திட்டத்தை மாவட்ட அளவிலான குழு வாயிலாக மதிப்பீடு செய்து, மாவட்ட திட்ட மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற்று, மாநில திட்ட மேலாண்மை அலகில் சமர்ப்பிக்கப்படும்.

**ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல், நிதி வழங்குதல் மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ் சமர்ப்பித்தல்**

மாநில திட்ட மேலாண்மை அலகு, உரிய ஆய்வுகளுக்குப் பின் மாவட்ட திட்ட மேலாண்மை அலகிற்கு, நிதியை விடுவிக்கும், மற்றும் குழு நிறுவனத்துடன் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டவுடன் நிதி வழங்கப்படும்

# “ஒவ்வொரு தையலிலும் சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்கிறோம்”




## சணல் பை

நாங்கள் ஒரு சமுதாயமாக ஒன்றிணைந்து "பொன்னியின் செல்வன் தொழிற் குழுவை" உருவாக்கினோம். இக்குழுவின் மூலமாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் சந்தையில் அதிக தேவையுடைய பைகள், கோப்புகள், மதிய உணவுப் பைகள் மற்றும் பணப்பை (பர்ஸ்கள்) போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து வருகிறோம். இப்போது ஒவ்வொரு உறுப்பினரும் நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 200 கூடுதல் வருமானம் பெறுகிறோம்.

இத்தொழிற் குழுவை சமுதாய திறன் பள்ளியின் மூலம் பயிற்சி பெற்ற பிறகு உருவாக்கினோம்.


பொன்னியின் செல்வன் தொழிற்குழு
மூவர்கோட்டை ஊராட்சி, நீடாமங்கலம் வட்டாரம், திருவாரூர்.

# தொழிற் குழு

**தொழிற் குழு** என்பது 10 முதல் 30 உறுப்பினர்களுடன் இயங்கும் கூட்டு உரிமை கொண்ட ஒரு குழுவாகும். அவர்கள் குழுவின் வணிக நடவடிக்கைகளின் லாபம் மற்றும் நட்டத்தை பகிர்ந்து கொள்ளும் கட்டுப்பாட்டை கொண்டுள்ளனர். ஒரு தொழிற் குழுவிற்கு ரூ.75,000 துவக்க நிதி மானியமாக வழங்கப்படுகின்றது.

| 1000 | 15,926 | ரூ. 9.30 |
|---|---|---|
| தொழிற்குழுக்கள் | உறுப்பினர்கள் | கோடி துவக்க நிதி |

## தொழிற்குழுக்களின் துறைவாரியான விவரங்கள்




(பிப்ரவரி, 2023 நிலவரப்படி)

# "ஆடுகளை வளர்க்கிறார்கள், வெற்றியை வார்க்கிறார்கள்"



## ஆடு வளர்ப்பு

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் உதவியுடன், 30 பெண்களை இணைத்து பண்ணை சார்ந்த தொழில் செய்வதற்காக ஒரு உற்பத்தியாளர் குழுவை உருவாக்கினோம். பெண்கள் தலைமையிலான இக்குழு ஆடு வளர்ப்பு தொழிலில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் ஆடு சார்ந்த பொருட்களை மதிப்பு கூட்டு செய்வதற்கும், மற்றும் தொழிலை மேம்படுத்துவதற்குமான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறோம்.

துவக்க நிதி ரூ.75,000/–


உதயமார்த்தாண்டபுரம்
ஆடு உற்பத்தியாளர் குழு
உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சி,
முத்துப்பேட்டை வட்டாரம், திருவாரூர்.

# உற்பத்தியாளர் குழு

குறிப்பிட்ட விளைபொருட்களை உற்பத்தி செய்யும் 30 முதல் 150 உற்பத்தியாளர்கள், உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்து கூடுதல் வருவாயைப் பெறுவதற்காக உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு உற்பத்தியாளர் குழுவிற்கு ரூ.75,000 துவக்க நிதி மானியமாக வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **5000**<br>உற்பத்தியாளர் குழுக்கள் | **2,72,604**<br>உறுப்பினர்கள் | ரூ.**50.73** கோடி<br>துவக்க நிதி |

## உற்பத்தியாளர் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விவரங்கள்




(பிப்ரவரி, 2023 நிலவரப்படி)

# "கைகளைக் கோர்த்து வெற்றியை அறுவடை செய்கிறோம்"




## கூட்டு வேளாண்மை

"எங்கள் மாவட்டத்தில் உள்ள பெண் விவசாயிகள் பங்குதாரர்களாக சேர்வதற்கும், உற்பத்தியாளர் நிறுவனத்தில் இயக்குநராக பதவி வகிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. எங்கள் கரிசல்காடு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலம் பெண் பங்குதாரர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஒரு முத்தாய்ப்பாக உள்ளது. வணிகத்தை ரூ.1 கோடி விற்றுமுதல் (turnover) வரை உயர்த்துவதன் மூலம் எங்கள் உற்பத்தியாளர் நிறுவனத்தை வலுப்படுத்த நாங்கள் அனைவரும் உறுதியாக இருக்கிறோம்"

நிறுவன உருவாக்க நிதி ரூ.5,00,000/–

வணிக விரிவாக்க சாத்தியத்திற்கான மானியம் ரூ.10,00,000/–


கரிசல்காடு உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் விருதுநகர்.

# உற்பத்தியாளர் கூட்டமைப்பு

உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்பது 300 முதல் 3000 பங்குதாரர்களை கொண்ட ஒரு உயர்மட்ட கூட்டமைப்பாகும். பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவைகள் ஆகியவற்றை இக்கூட்டமைப்பு வழங்குகிறது. அனைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகளும் நிறுவனச் சட்டம், 2013ன்கீழ் பதியப்படும். இக்கூட்டமைப்புகளுக்கு அதிகபட்சமாக ரூ.30 லட்சம் வரை துவக்க நிதி நான்கு தவணைகளில் வழங்கப்படுகிறது.

| 53 | 46,555 | ரூ..7.00 |
|---|---|---|
| உற்பத்தியாளர் நிறுவனங்கள் | உறுப்பினர்கள் | கோடி துவக்க நிதி |

## உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் உற்பத்திப் பொருட்கள் விவரங்கள்




(பிப்ரவரி, 2023 நிலவரப்படி)



# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் விளைவுகள்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
TAMIL NADU RURAL TRANSFORMATION PROJECT

**01**
உற்பத்தியாளர் கூட்டமைப்புகளில் முடிவெடுப்பதன் மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல்.

**02**
சிறந்த பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது உற்பத்தித்திறனை அதிகரிக்க வழிவகுக்கும்

**03**
சிறந்த வருமானத்திற்காக தயாரிப்புகளின் பல்வகைப்படுத்தலை எளிதாக்குதல்

**04**
பாரம்பரிய மற்றும் ஊதியம் தரும் வர்த்தகங்களின் மறுமலர்ச்சி அதன் மூலம் இடப்பெயர்வுகளைத் தடுக்கிறது

**05**
கூடுதல் ஊதியம் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள்

**06**
முறையான நிதி நிறுவனங்களிடமிருந்து நிறுவனங்களுக்கு சரியான நேரத்தில் கடன்

**07**
நிறுவன மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு மூலம் சொத்து உருவாக்கம் மற்றும் நிலையான வருமானம்.

மேலும் தகவல்களுக்கு
ஸ்கேன் செய்யவும்:




வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை